INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

23 ஏப்பிரல் 2018

ஊடக அறிக்கை: குற்றம் செய்தவர்களின் பட்டியலை ஐ.நாவின் மீள்பார்வைக்கு அனுப்பும் ITJP

இலண்டன்: ஐ.நா அமைதிகாக்கும் நடவடிக்கையில் பணியாற்றுவதில் இருந்து தடைசெய்யப்படவேண்டிய விசேட அதிரடிப்படையின் 50 இற்கும் மேற்பட்ட இலங்கை சிறப்பு இராணுவப் பொலிசாரின் பெயர்களைக் கொண்ட ஒரு இரகசியப் பெயர்ப் பட்டியலை ITJP தயாரித்துள்ளது. விசேட அதிரடிப்படையினர் உட்பட பாதுகாப்பு படைகள் திட்டமிட்ட குற்றச்செயல்களை புரிந்துள்ளார்கள் என ஐ நா தெரிவிக்கும் சூழலில் இந்த தனிப்பட்ட நபர்கள் குற்றவாளிகளாக சந்தேகிக்கப்படுபவர்களாக அல்லது இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முன்னரங்க நிலையில் போரில் ஈடுபட்டவர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இந்தப் பட்டியலானது ஐ.நாவின் அமைதிகாக்கும் பணிக்கான திணைக்களம் மற்றும் ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்த்தானிகரின் அலுவலகத்துடன் பகிர்ந்து கொள்ளப்படும்.

*"ஆபிரிக்காவில் ஐ.நாவின் அமைதிகாக்கும் நடவடிக்கையில் தற்போது பணியாற்றிவரும் விசேட அதிரடிப் படை அதிகாரி ஒருவர் 2006 -7 காலப் பகுதியில் இலங்கையின் கிழக்கில் தமிழர்கள் கண்மூடித்தனமான முறையில் படுகொலை செய்யப்படுவதற்கு உத்தரவிட்டார் என குற்றஞ்சாட்டப்படுவதாக ITJP யின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார்"*.

ITJP யின் இந்த மீள்பார்வைக்கான பட்டியலானது:

- இலங்கையில் பாரிய மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பான அல்லது அதனுடன் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட 24 விசேட அதிரடிப்படையினரின் பெயர்களையும்
- இலங்கையில் போரின் போது முன்னரங்க முக்கிய சண்டை பணிகளில் ஈடுபட்ட 32 விசேட அதிரடிப் படை அதிகாரிகளினதும் பெயர்களைக் கொண்டுள்ளது. இதனால் இவர்கள் ஐ நா அமைதி காக்கும் நவடிக்கையில் பணியாற்றுவதில் இருந்து தடைசெய்யப்பட வேண்டும்.

2016 இல் , ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகளுக்கான ஐ நா உயர்ஸ்த்தானிகரின் அலுவலகம் மாலிக்கான இலங்கை அமைதிகாக்கும் படையினரை மீளாய்வு செய்ததுடன் இறுதிக்கட்டப் போரின் போது முன்னரங்கப் போர் அணிகளில் கடமையாற்றியவர்களை அதிலிருந்து நீக்கியது.

*“பொலிஸ் கொமாண்டோக்களும் தற்போது வெளிநாடுகளுக்கு ஐ.நாவின் அமைதி காக்கும் படையினர்களாக அனுப்பப்பட்டுவருகிறார்கள் அத்துடன் இராணுவத்தைப் போல கடுமையான மீளாய்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் ”, என ITJP யின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார்.*

*“சாட்சியாளர்களுக்கான பாதுகாப்பு வழங்கப்பட்டால் நாங்கள் இந்த நடவடிக்கைக்கு உதவுவதற்கு தயாராக உள்ளோம் - பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலம் மாத்திரமல்லாது உள் சாட்சியார்களது தகவல்கள், படங்கள், பெயர்கள் போன்றவற்றை உள்ளடக்கிய சாட்சியங்களின் ஒரு விரிவான பதிவுகளை வைத்துள்ள ஒரு அமைப்பக நாங்கள் இருக்கின்றோம்”, என சூக்கா மேலும் தெரிவித்தார்.*

*கடந்த காலத்தில் முக்கியமாக விசேட அதிரடிப்படைப் பிரிவில் பணியாற்றிய சிங்களவர்களினதும் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து அவர்களுக்கு வேலை செய்த முன்னாள் தமிழ் ஒட்டுக்குழு உறுப்பினர்களதும் சாட்சியங்களை அடிப்படையாக வைத்து விசேட அதிரடிப்படையினர் பற்றிய ஒரு புதிய அறிக்கையை ITJP திங்கட்கிழமை வெளியிட்டுள்ளது.* கொழும்பில் விசேட அதிரடிப்படையின் ‘*வெள்ளை வான்*’ கடத்தல் அணியில் பணியாற்றி அதனால் இன்னும் அதிர்ச்சியில் உள்ள ஒரு சிங்கள நபர் அதனை ‘*பயங்கரமான படம்* போன்றது’என விபரித்தார். சிவில் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போது கொழும்மில் செயற்பட்ட இன்னுமொரு விசாரணையாளர் தன்னால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி தெரிவித்த போது: ‘நாங்கள் வயர் அல்லது கயிற்றால் கழுத்தை நசுக்கி கொல்லுவோம் , கழுத்தை நசுக்குவோம், கத்தியால் குத்துவோம் அல்லது சாகும்வரை அவர்களை அடிப்போம்’ என்றார்.

நாங்கள் கண்ட அனைத்து பாதிக்கப்பட்டவர்களுமே இறுதியில் கொல்லப்பட்டதாக சாட்சியாளர்கள் தெரிவித்தார்கள். ITJP ஆனது மற்றைய படைப் பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் கடத்தல், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை போன்றவற்றை ஆவணப்படுத்தியுள்ள போதும் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் விசேட அதிரடிப்படையினரின் ஆட்கடத்தல் அணிகள் இன்னும் செயற்படுகின்றார்கள் என்பனை உறுதிப்படுத்தும் எந்தவித அறிகுறிகளும் இதுவரை கிடைக்கவில்லை.

இலங்கையின் கிழக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை கண்மூடித்தனமாக கொல்லுதல், மறைமுகக் கொலைகள் மற்றும் பாலியல் வன்முறைகளை அனுமதித்தல் போன்ற நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கான கட்டளைகளை சில விசேட அதிரடிப்படை அதிகாரிகளே மேற்கொள்வதாக சாட்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆட்கடத்தல் மற்றும் சிறுவர் ஆட்சேர்ப்பு ஆகியன கருணா குழுவின் இராணுவ அடிப்படை மூலோபாயம் என ஐ.நா விபரித்திருக்கின்ற போதிலும் விசேட அதிரடிப்படையினர் LTTE யில் இருந்து பிரிந்து சென்ற கருணா குழுவினருக்கு ஆயுதங்கள் வெடிபொருட்களை வழங்கி அவர்களுடன் மிகவும் நெருக்கமாக இணைந்து செயற்பட்டு வருகின்றார்கள்.

*“இங்கு பின்னிணைப்பாக எமது சக நண்பர்களால் தொகுக்கப்பட்ட மனித உரிமைகள் அறிக்கைகளை நீங்கள் பார்த்தால் பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக விசேட அதிரடிப்படையினரின் பெயர் மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது அவ்வாறிருக்கும் போது அதிரடிப்படையினர் எவ்வாறு கண்டுகொள்ளாமல் விடப்பட்டார்கள் என எனக்கு புரியாதுள்ளது. அத்துடன் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு இன்னும் அமைதிகாக்கும் பணிகள் இன்னும் வழங்கப்பட்டுவருகின்றன” என சூக்கா தெரிவித்தார்.*

*முற்றும்*

*ITJP பற்றிய பின்னணி தகவல்*

*ITJP யின் சர்வதேச விசாரணையாளர்கள் 2013 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்ட மீறல்களை ஆவணப்படுத்திவருகிறார்கள் அத்துடன் இறுதிப் போர் பற்றியதும் அதற்குப் பின்னரான நிலைமை பற்றியதுமான இலங்கைக்கு வெளியே பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குமூலங்களைக் கொண்ட பாரியதொரு தகவல் பதிவை தற்போது வைத்திருக்கிறார்கள்.*

*28 ஆகஸ்ட் 2017 இல் ITJP ஆனது 2009 ஆம் ஆண்டின் சிவில் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போது அவருடைய நடவடிக்கைகளுக்காக இலத்தீன் அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவரான ஜெகத்ஜெயசூரியாவிற்கு எதிராக பிரேசில், கொலம்பியா, பெரு மற்றும் சிலி ஆகிய நாடுகளில் போர்குற்ற வழக்குகளை தாக்கல் செய்துள்ளது. ITJP யினது வழக்கானது வைத்தியசாலைகள் மீது மீண்டும் மீண்டும் தாக்குதல்கள் மேற்கொண்ட அணிகள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறையில் ஈடுபட்ட அணிகள் , பலவந்தமான காணாமற்போதல்கள் மற்றும் நீதிக்கும்புறம்பான கொலைகளில் ஈடுபட்ட அணிகளுக்கு கட்டளை அதிகாரியாக இருந்தார் என்ற வகையில் ஜெனரல் ஜெகத்ஜெயசூரியா தனிப்பட்ட குற்றப் பொறுப்பை கொண்டுள்ளார் எனக் குற்றஞ்சாட்டுகின்றது.*

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT